Available online at www.jilile.in ISSN: 3048-4952
JOURNAL OF INDIAN LANGUAGES AND INDIAN LITERATURE IN ENGLISH
Journal of Indian languages and Indian literature in English, 03(02), 182-193; 2025

# கடல் புரத்தில், செம்மீன் புதினங்களில் வாழ்வியல் சிக்கல்கள் – ஒப்பீட்டு நோக்கு

**முனைவர் பெ.சுமதி,** இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், ஆட்சிப்பேரவை உறுப்பினர், ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.

**Dr.P.SUMATHI,** Associate Professor & Head, Senate Member, Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University , Madurai – 21.

MAIL : psumathiarul@gmail.com , Cont no: 9994952162

**கா.விக்னேஷ்,** முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.

**K.VIGNESH,** Full Time Research Scholar, Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University , Madurai – 21.

MAIL : vickykasi281@gmail.com , Cont no: 8056844612

Submission Date:16.03.2025

Acceptance Date:24.03.2025

**ஆய்வுச்சுருக்கம்**

பெண் என்பதற்காகவே இந்த சமூகத்தில் பெண்கள் பல்வேறு இன்னல்களை சந்திக்கின்றனர். பெண்கள் மென்மையானவர்கள், ஆண்கள் வலிமையானவர்கள் என்று இந்த சமூகம் கட்டமைத்ததால் பெண்கள் இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். ஒரு பெண்ணின் தேவைகள் ஆணைப் பொறுத்தது. ஒரு பெண் தன் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்த முடியாது. வண்ண நிலவனின் கடல் புரத்தில், தாகழி சிவசங்கரம் பிள்ளையின் செம்மீன் ஆகிய புதினங்களில் மீனவ சமுதாயப் பெண்கள் தங்கள் வாழ்வில் சுயமாக சிந்தித்து முடிவெடுக்கும் அதிகாரம் பெறவில்லை. கடல்புரத்தில், பிலோமிக்கு சமிதாசை பிடிக்கும். செம்மீனில் கருத்தம்மாவுக்கு பரிக்குட்டியை பிடிக்கும். ஆனால் இரு பெண்களும் தங்கள் விருப்பத்தை பெற்றோரிடம் கூறி திருமணம் செய்து வைக்கும் தைரியம் வரவில்லை. பிலோமி மற்றும் கருத்தம்மா இருவருமே தங்கள் விருப்பங்களை வெளிப்படையாகச் சொல்ல முடியாது என்று குடும்பமும் சமூகமும் கட்டமைத்துள்ளன. மீனவர்கள் கடலுக்குச் சென்று உயிருடன் திரும்ப வேண்டுமானால், மீனவப் பெண்கள் கற்புடன் நடந்து கொள்ள வேண்டும் என மீனவ சமூகம் வலியுறுத்துகிறது. பெண்கள் ஒழுக்கமின்றி இருந்தால் ஆண்கள் உயிருடன் திரும்ப மாட்டார்கள் என்று புராணங்கள் கட்டமைக்கின்றன. பெண்களுக்கு ஒழுக்கம் இல்லை. ஆனால் ஆண்கள் உயிருடன் திரும்பி வருகிறார்கள். ஆனால் பெண்கள் மட்டும் கடல்புரத்தில், செம்மீன் புதினங்களில் கற்பைக் காக்கத் தவறியதற்காகத் தண்டிக்கப்படுகிறார்கள் என்ற சமூக அவலம் ஆராயப்பட்டுள்ளது.

**குறிப்புச் சொற்கள்**

கடல் புறத்தில், செம்மீன், கற்பு, மீனவ சமூகம், புராணங்கள், சிக்கல்கள், தண்டனை, அதிகாரம்.

**முன்னுரை**

பெண்களுக்கான வாழ்வியல் சிக்கல்கள் எல்லாச் சமுதாயத்திலும் எந்த வேறுபாடும் இல்லாமல் காணப்படுகின்றன. சங்க இலக்கிய நெய்தல் திணை பெண்கள் போன்று கடல்புரத்தில், செம்மீன் ஆகிய புதினங்களில் கட்டமைக்கப்படும் பெண்களும் காணப்படுகின்றார்கள். காலம்தோறும் பெண்களின் சிக்கல்களில் மாற்றம் இல்லை. செம்மீன் மீனவப் பெண்கள் எதிர்கொள்கின்ற வாழ்வியல் சிக்கல்களைப் பதிவு செய்கின்றது. செம்மீனில் கருத்தம்மா தான் விரும்பிய பரீக்குட்டியை திருமணம் செய்து கொள்வதற்கு அவளது குடும்பமும் மதமும் தடையாக இருக்கின்றன. கடல் புரத்தில் பிலோமி, சாமிதாஸை திருமணம் செய்து கொள்வதற்கு சாமிதாஸின் பணம் தடையாக இருக்கின்றது. மதம், பணம் தடையாக இருப்பதோடு மட்டுமல்லாமல் மீனவப் பெண்களுக்குக் கற்புக் கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. தொன்மக் கருத்துகளின் வழியாக மீனவப் பெண்கள் கற்புடன் வாழ வலியுறுத்தப்படுகின்றார்கள். கடலுக்குச் சென்ற ஆண்கள் உயிருடன் கரைக்குத் திரும்புவது பெண்களின் கற்பினால் மட்டுமே என்று பெண்களுக்குக் கற்பு கட்டமைக்கப்படுகிறது. பெண்கள் கற்புநிலை தவறும் போது அதற்கான தண்டனையை அனுபவிக்கின்றார்கள். அந்த வகையில் கடல்புரத்தில், செம்மீன், மீனவப் பெண்கள் வாழ்வியலில் எதிர் கொண்ட சிக்கல்களை ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மீனவ இனம் - பிறப்பின் தொன்மம்**

ஒவ்வொரு இன மக்களின் பிறப்பிற்கும் பல்வேறு வகையான தொன்மக் கதைகள் கூறப்படும். மீனவ மக்களின் பிறப்பைப் பற்றிய தொன்மம் மகாபாரதக் கதையோடு தொடர்புப்படுத்தப்படுகிறது.

மகாபாரதத்தின் ஆதிபருவத்தில் பரவரின் அரசன் யமுனைக் கரையிலிருந்து அரசாண்டதாகவும் ஒரு மீனின் வயிற்றிலிருந்து அவன் ஒரு பெண்ணைக் கண்டெடுத்ததாகவும் அவளுக்கு மச்சகந்தி என்ற பெயரைத் தந்து தன்னுடைய மகளாக வளர்த்து வந்ததாகவும் அவள் பருவம் அடைந்தபின் குல வழக்கப்படி பரவப் பெண்களோடு கூட ஆற்றின் குறுக்கே பரிசலோட்டிப் பயணிகளை மறுகரை சேர்க்கும் பணியினை மேற்கொண்டாள். ஒருநாள் பராசர முனிவர் அவளைப் பரிசல் துறையில் கண்டு காதல் கொள்ள அவள் கருவுற்று ஒரு குழந்தையினைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையே புராணங்கள் பலவற்றை இயற்றியவரான புகழ்பெற்ற வியாசர். பின்னர் அவளுடைய அழகில் மோகம் கொண்ட சந்திர குல மன்னனான சந்தனு அவளை தன் மனைவியாக்கிக் கொள்ள அவள் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் மூதாதையான விசித்திர வீரியனைப்

பெற்றெடுத்தாள். அஸ்தினாபுர அரசுக்கு உரிமை கொண்டாடி இவர்கள் நடத்திய பெரும்போரே மகாபாரத இதிகாசத்தின் கதைக் கருவாக உள்ளது. (எட்கர்தர்ஸ்டன், தென்னியந்தியக் குலங்களும் குடிகளும், (த.ஆ) க.இரத்தினம், 2003, பக்-153-154)

மீனவ குல அரசன், மீனின் வயிற்றிலிருந்து ஒரு பெண்ணை கண்டெடுத்து அதற்கு மச்ச கந்தி என்று பெயரிட்டு வளர்த்து வருகின்றான். பராசர முனிவருக்கும் மச்சகந்திக்கும் வியாசர் பிறக்கின்றார். மகாபாரதத்தை எழுதியவர் வியாசர், அந்த வியாசர்வழித் தோன்றல்கள் மீனவ குலம் என்று தொன்மக் கதை கட்டமைக்கின்றது.

சங்க இலக்கியத்தில் மீனவர்களின் குடியிருப்புப் பற்றி கூறப்படுகின்றது.

பரதவர்கள் வாழும் குடிசைகள் வஞ்சி, காஞ்சி என்னும் மரங்களின் வெண்மையான கொம்புகளைக் கொண்டு வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. கள் தாழை நாரால் கட்டித் தருப்பைப் புல்லால கூரையை வேயந்தார்கள் (முனைவர் பா.ரம்யா,ப.318)

பல்வேறு ஊர்களில் பல்வேறு பெயர்களில் மீனவ இன மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

நாராண்பை (பாண்டி) சுற்காலச்சேரி (காரை), அசகளத்தூர், கண்டாச்சிமங்களம், வளஞ்சரம், வேளாக்குறிச்சி, செம்பூர், மாடூர் மலையனூர், தச்சூர், வீராணம், திருநாவலூர், பொறையூர், பாசூர். திருவண்ணாமலை, திருக்கோயிலூர், புல்லூர், சோழபாண்டியநல்லூர், பஞ்சமாதேவி, குயவனூர், கள்ளக் குறிச்சி, சங்கராபுரம், காட்டுக்கோட்டை, வீரகனூர், பெத்த நாயக்கன் பாளையம், ஆத்தூர், சேலம், கிருஷ்ணகிரி, சீரகாபாடி, இடைப்பாடி, காவேரிப்பட்டி, மேட்டூர், பெரிய கொடிவேரி போன்ற ஊர்களில் பர்வதராஜகுலம் என்ற பெயரிலும், பாண்டிச்சேரியில் கரையாளர் என்ற பெயரிலும், திருமலை ராயன் பட்டினத்தின் பட்டினம்கோயில் வீரகாளியம்மனை வழிபட்டு, கடலில் மீன்பிடித்தும் வாழ்ந்து வருகின்றனர். குமரி மாவட்டத்தின் கடலில் மீன்பிடித்து முக்குவர் என்ற பெயரிலும், அரியாங்குப்பம் பகுதியில் மீன்பிடித்து செம்படவர் என்ற பெயரிலும், ஆனந்தநாடு எனப்படும் ஆம்பூர், குடியேற்றம் திருப்பத்தூர், வாலாஜா பகுதிகளில் உள்ள ஏரி, ஆறுகளிலும் மீன்பிடித்து நாட்டார் என்ற பெயரிலும் இவர் வாழ்ந்து வருகின்றனர். (அரு. பரமசிவம், பரதவர் இனவரைவியல், 2014, பக்.48-49)

மீனவர்கள் வாழ்கின்ற பல்வேறு ஊர்களும் அங்கு வாழ்கின்ற மக்களின் இனப்பெயர்களும் பற்றி அறிந்துகொள்ளமுடிகிறது.

**மீனவர்களின் ஆவி நம்பிக்கை**

மீனவர்கள் இறந்தால் அதை அறிவிப்பதற்குக் கடற்கரையில் கொடி நாட்டும் பழக்கம் பற்றி கூறப்படுகிறது. தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் காணப்படுகிறது. மீனவர்களில் யாரேனும் இறந்துபோனால், அலைக் கரையில் கொடி நாட்டி அதை ஏனைய மீனவர்களுக்கு அறிவித்தலும், அக்குறிப்பிட்ட நாளில் மீன் பிடிக்கச் செல்லாதிருத்தலும் இன்றைய வழக்கமாகும். இவ்வழக்கம் மீன்கள், இறந்தோர் ஆவியுறையும் புகலிடங்கள் என்னும் நம்பிக்கை தனது செயற்பாட்டுத் தன்மையை இழந்துபோனதன் வெறும் சுவடாகவும் இருக்கலாம். (தனஞ்செயன், குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், 2012, ப.186)

மக்களின் தொன்மை வழிபாட்டில் ஆவிவழிபாடு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. அந்த ஆவி பற்றிய நம்பிக்கை இன்றும் மீனவ மக்களிடம் காணப்படுகின்றது. இறப்பு நடந்ததை அறிவிப்பதற்குக் கொடி நாட்டுவது கடலுக்குச் சென்றவர்கள் கலங்கரை விளக்கைப் பார்த்து கரைக்குத் திரும்பும்புவது போன்று கொடியைப் பார்த்துத் திரும்பியிருக்கலாம் என்பதாக அறியமுடிகிறது.

**பெண்ணுக்கான வரையறை**

பெண், ஆணைச்சார்ந்து வாழ்வது முறியடிக்கப்படவேண்டும் என்று புரட்ச்சிக்கவியின் கருத்துக் குறிப்பிடப்படுகின்றது.

தந்தை பெரியாரின் கருத்து வீச்சில் கவரப்பெற்ற பாரதிதாசன் பெண்களின் வீரத்தைக் குறித்துப் பாராட்டுவதோடு அவர் கையில் வாளைக் கொடுத்து, பகைவரோடு பொருத வழி அனுப்புகிறார் தாசனாருக்கு முன்னோடியான பாரதியார் 'அச்சந்தவிர்' என்றார். புரட்சிக் கவிஞர் ஆணோடு பெண் நிகர் என்று கூறுவதற்கும் மேலாகப் 'பெண்ணோடு ஆண் நிகர்' என்றார். பாவேந்தர் வாழ்ந்த காலத்தில் ஆண்கள், பெண்களை வீரமில்லாதவர்களாக, இழிபிறவியாக நினைத்தனர் இந்நிலையை மாற்ற விரும்பிய பாவேந்தர் ஆண்களைக் கோழைகளாக்கிப் பெண்களை வீராங்கனைகளாக்கினர்." (முனைவர் சு.சரஸ்வதி, ப.17) புரட்ச்சிக்கவியின் பெண்ணுக்கு நிகர் ஆண் என்ற சிந்தனை பெண்களுக்கு எழுச்சி ஏற்படுத்துவதாக அமையும்.

பெண்ணின் வாழ்வியல் ஆண்களால் கட்டமைக்கப்படுகிறது. அதற்குப் பெண்களின் உடல் காரணமாகக் கூறப்படுகிறது. ஆண், பெண் என்ற இயற்கையின் படைப்பில் வலியது, மெலியது என்று வேறுபடுத்திப் பார்க்கப்படுகிறது.

மானிட பாலியல் அறங்கள் எல்லாம் ஆண்களாலும், அவற்றை ஏற்றுப் பழகிவிட்ட பெண்களாலும் செயற்கையாக உருவாக்கப்பட்டவை, கலாச்சாரப் பெறுமதிகளைக் கொண்டவை, ஆய்வில் பார்த்தால் ஆண்களின் நலன்களுக்கானவை. ஆண் மைய நாகரிகம் என்று இதனை அழைப்பர். அதற்காகப் பெண் இந்த நாகரிகத்தின் கொடைகளிலிருந்து விலக்கப்பட்டாள் என்று பொருளில்லை. உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படை நாகரிகத் தேவைகள் ஆணுக்கு இருந்த மாதிரி பெண்ணுக்கும் இருந்தன. ஆனால் இத்தேவைகளைப் பெண்கள் அவரவர் சார்ந்த ஆண்களின் மூலமாக அடைந்தார்கள். (ராஜ்கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், 2008, பக்.331-332)

வலிய செயல்கள் அனைத்தும் ஆண்களால் மட்டுமே முடியும் என்ற பிம்பம் ஆண் சமூகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண் என்றால் வலிமை, பெண் என்றால் மென்மை என்ற சிந்தனை சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவையில் ஆண், பெண் என்ற எந்தவித வேறுபாடும் இல்லை. ஆனால் ஆணின் அடிப்படைத் தேவையை அவனால் நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஆனால் பெண்ணின் அடிப்படைத்தேவை ஆணைச்சார்ந்தே இயங்கும் என்று கூறப்படுகிறது. பெண் சமூகம் அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றுவதற்குக் கூட ஆணைச் சார்ந்து வாழ வேண்டிய சூழலை இச்சமூகம் கட்டமைத்திருக்கின்றது.

பெண் தன்னுடைய தேவைகளை சுயமாக நிறைவேற்றும் ஆற்றலுடையவளாகத் திகழ வேண்டும் என்பதை அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுகின்றார்.

பெண் விடுதலையே சமூகத்தின் விடுதலை என்கிறார் அண்ணல் அம்பேத்கர், பெண் சுயமாகச் சிந்திப்பதும், தனக்கான உரிமையைப் பெறுவதும், சமூகத்தில் பெண் தான் ஒரு அங்கம் என்ற நிலைப்பாட்டைப் பெறுவதுமென இவை எல்லாம் கிடைக்குமென்றால் அச்சமூகம் வளர்ச்சியடந்த சமூகமாகக் கருதப்படும். (முனைவர் நா.சுலோசனா, ப.26) பெண்ணை சமூகத்தில் ஒரு அங்கமாக நினைத்து அவளுக்கு அனைத்தும் கிடைப்படற்கு வழிவகை செய்தால் இச்சமூகம் வளர்ச்சியடையும் என்று சமூக எதார்த்த நிலை பதிவு செய்யப்படுகின்றது.

பெண்களை ஒட்டுமொத்தமாகக் கட்டுப்படுத்துவது அவளுடைய கற்பு என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்ணின் முழு அறிவு, ஆற்றல், ஆளுமைச் சிறப்பு எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவது கற்பு நெறி என்ற அழுத்தமான ஓர் ஒழுக்க வளையம்தான் என்பது கூர்ந்து சிந்தித்தால் புலனாகிறது. மணவாழ்வு என்பது, வாழ்வின் இன்பங்களும், பயன்களும் ஆணுக்கே உரித்தாக்கி அதன் கடுமைகளையும், துன்பங்களையும் பெண்ணுக்கு உரியவை என்று ஒதுக்கிவிடும், (ராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண், 2002, பக்.14)

பெண் திறமை, அறிவுக்கூர்மை, கற்றல், வலிமை என்று மிகச் சிறந்த ஆளுமை மிக்கவளாக இருந்தாலும் அவை பெண்ணிற்குப் பெருமை சேர்ப்பதில்லை. ஒழுக்கமாகிய கற்பு மட்டுமே பெண்ணின் பெருமையாகப் பார்க்கப்படுகிறது. பெண்ணுக்கு உயிரைவிடச் சிறந்தது கற்பு என்று வரையறுக்கப்படுகிறது. பெண் ஒழுக்கம் தவறினால் இறந்துவிட வேண்டும் என்பதை இச்சமூகம் வலியுறுத்துகின்றது.

**கடலுக்குச் செல்லும் ஆண்களுக்கு வேண்டுதல்**

ஒப்பிடுவதற்கு ஒத்த கருத்துள்ள படைப்புகளை மட்டுமே ஒப்பிடமுடியும் என்பது குறிப்பிடப்படுகின்றது.

ஏதேனும் சில பொது தன்மைகளை அடிப்படையாக பெற்றுள்ள இலக்கிய படைப்புகளையே நாம் ஒப்பிட்டு பார்க்க முடியும் மற்றும் வேறுபட்டு வழங்கும் இருவேறு படைப்புகளை ஒப்பிட்டு பார்ப்பது பொருத்தமற்றது (முனைவர் ந.புனித லெட்சுமி,216)

பிலோமியின் தாய் மரியம்மை தன் கணவன் மீது பெரிதும் விருப்பம் இல்லாதவள் போன்று காணப்படுகின்றாள். கடல் கரையில் வாழ்கின்ற பெண்கள் கடலுக்குச் செல்லும் கணவன் மீண்டும் உயிருடன் திரும்ப வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும். அதனால் பிலோமியின் தந்தை குரூஸ் தூங்கிக் கொண்டிருக்கும் தன் மனைவி மரியம்மையை எழுப்பி விடுகிறான்.

நல்ல மனைவி இப்படித் தூங்கமாட்டாள் என்று குரூஸ் மிக்கேல் நினைத்தான். புருஷன் வீட்டுக்குத் திரும்புகிறவரையிலும் அவள் கடவுளிடம் வேண்டிக் கொண்டிருப்பாள். கடலில் அலைகளே இல்லாதிருக்க வேண்டும். காற்றின் உக்கிரம் தணிந்து மீன் பிடிக்கிறதுக்கு ஏதுவாய் இருக்க வேண்டும். வல்லம், பாறைகளில் மோதிவிடக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாய் அவர்களுடைய வாழ்வு செழிக்க, வலையில் நிறைய மீன் வந்து விழவேண்டும். இப்படியெல்லாம் ஒவ்வொரு பறைச்சியும் கடவுளிடம் வேண்டிக் கொண்டிருப்பாள். (வண்ணநிலவன், கடல்புரத்தில், 2020 பக்.28)

மரியம்மையை எழுப்பவில்லை என்றால் குரூஸ் கடலுக்குச் சென்று திரும்பும் வரை தூங்கிக் கொண்டுதான் இருப்பாள். கடலுக்குச் செல்லும் கணவனைப் பற்றி மரியம்மை கவலைப்பட போவதில்லை. ஆனால் கடலுக்குச் செல்லும் ஆண்கள் உயிருடன் திரும்ப வேண்டும் என்று கடல் கரையில் இருக்கும் பெண்கள் வேண்டிக் கொள்ள வேண்டும் என்பது மீனவ இன பெண்களுக்கான கற்பு கட்டமைப்பாகக் காணப்படுகின்றது. மரியம்மை குரூசை திருமணம் முடித்த போது கணவனுக்காக வேண்டிக் கொள்வாள், ஆனால் அதை மரியம்மையின் தூக்கம் தடுக்கின்றது.

ஒவ்வொரு நாள் காலையிலும் கரைக்குத் திரும்புகிற வல்லங்களோடும் படகுகளோடும் லாஞ்சிகளோடும் குரூஸ் மிக்கேலுடைய வல்லமும் நிறைய மீன்களுடன் கரைக்குத் திரும்பி வந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் அவன் அவளைத் தூங்கவிடமாட்டான். அவள் தூங்குகிறதைக் கண்டால் அவனுக்குக் கெட்டகோபம் வரும். அவனுடைய தளர்ந்துகொண்டிருக்கிற உடம்பெல்லாம் கோபத்தால் நடுங்கும். (வண்ணநிலவன், கடல்புரத்தில், 2020 ப.29)

கடலுக்குச் சென்ற தன் கணவன் குரூசுக்காக மரியம்மை கடவுளிடம் வேண்டிக் கொள்வது இல்லை, ஆனாலும் குரூஸும் அவனுடைய வல்லமும் கடற்கரைக்குப் பாதுகாப்பாகத் திரும்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால் குரூஸ் தன் மனைவி தனக்காக வேண்டிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றான். பெண் என்பவள் அவருடைய சுய, விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்ற சிந்தனை குரூஸின் செயலில் வெளிப்படுகின்றது.

**பெண்களின் கற்புக் கட்டமைப்பு**

கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே கட்டமைக்கப்பட்டது போன்று கட்மைப்பை இச்சமூகம் கட்டமைத்துவைத்திருக்கின்றது.

பாலியல் ஒழுக்கம் என்பது வரலாற்றுக் காலம் தொட்டுப் பெண்ணை மையமிட்ட ஒன்றாகவே உள்ளது. நமது தொன்மை இலக்கியமான சங்க இலக்கியங்களில் "பரத்தையர் பிரிவு' என்ற நிலையில் பாலியல் ஒழுக்கம் அற்றவர்களாகப் பெண்கள் மட்டுமே குறிக்கப்படுவதும், சிலப்பதிகாரத்தில் கற்பு என்று சொல் கண்ணகி - மாதவி என்று இரு பெண்ணை மையமிட்டதாக இருப்பதும், அதன் தொடர்ச்சி இன்று வரை நீள்வதையும் சொல்லலாம். (ஆ.சந்திரன்,ப.71) பெண்கள் காலந்தோறும் ஆண்களின் கைப்பாவைகளாகவே இயக்கப்படுகின்றார்கள் என்ற சமூக அவலம் பதவுசெய்யப்படுகின்றது.

பிலோமி கடற்கரைக்கு மீன் வாங்கச் செல்லும் போது கேதரின் அருகில் நிற்கின்றாள். கேதரினை அவளுடைய கணவன் ஐசக் கோபித்து கண்டிக்கின்றான். பிலோமி ஐசக்கிடம் கேதரினை கோபித்து கண்டிக்க வேண்டாம் என்று கூறுகின்றாள்.

எல்லா வற்றையும் கடல் அம்மை சகித்திருக்கிறாள். ஏனென்றால், அவளுடைய பிள்ளைகளின் மீது அவள் கொண்டிருக்கிற பிரியம் அவ்வளவு. இந்தப் பிலோமிகூட நேற்று சாமிதாஸ் உடன் படுத்திருக்கவில்லையா? அதற்காகக் கடல் அவளைப் பலி கொள்ளவில்லை. அந்தக் கடல் மிகவும் புனிதமானது. அவர்களுடைய குடியிருப்புகளோ அசுத்தமானவைகள். (தகழி சிவசங்கரப் பிள்ளை, செம்மீன், (தமிழில்) சுந்தரராமசாமி, 2018, பக்.15-16)

மீனவ இன மக்களின் வாழ்வியல் கடலுடன் இரண்டற கலந்தவை. பிலோமி சாமிதாஸிடம் தன் கற்பை இழக்கின்றாள். இதுபோன்று பல நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் கடல் மாதா அவர்களின் தவறான செயல்களுக்காகக் கண்டிப்பதில்லை. அவர்களுக்கு மீன்வளத்தை அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றாள். ஆண்கள், பெண்களுக்கு விதித்த கற்பிற்கும் இயற்கையின் நிகழ்விற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது பதிவு செய்யப்படுகிறது.

**தொன்மமும் கற்பும்**

செம்மீன் புதினத்தில் கருத்தம்மா தன் தாய் சக்கியிடம் பரீக்குட்டியிடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு கூறுகின்றாள். ஆனால் கருத்தம்மாவின் தந்தை செம்பன்குஞ்சு தரமறுக்கின்றான். கருத்தம்மாவிற்கு பரீக்குட்டியின் மீது ஏன் பரிவு தோன்றுகிறது என்று சக்கி சந்தேகப்படுகின்றாள். அதனால் தன் மகளிடம் ஒழுக்கம் தவறி நடந்து விடக்கூடாது என்று அறிவுரை கூறுகின்றாள்

ஒரு பெரிய மீனோடு அவன் கரைவந்து சேரவும் சேர்ந்தான். அந்தப் புயலிலிருந்து எவ்வாறு மீண்டு வந்தான் அவன்? அவனைத் திமிங்கிலங்கள் ஏன் விழுங்கவில்லை? சுறாமீனால் தாக்குண்டும் தோணிக்குக் கேடு எதுவும் சம்பவிக்கவில்லையே? நீரோட்டம் வழிவிடத் தோணி மிதந்துவந்தது. இவ்வாறெல்லாம் நிகழக் காரணம் என்ன? அந்தக் கற்புடையாள்; கடற்கரையில் தவம் செய்து கொண்டிருந்தாள். (தகழி சிவசங்கரப் பிள்ளை, செம்மீன், (தமிழில்) சுந்தரராமசாமி, 2018, பக்.16-17)

கடல் அலையில் இறால் மீனிடம் சிக்கி உயிர்விடும் சூழலில் பெண்ணின் தவ வலிமை, அவளின் கர்ப்பின் ஆற்றல் சென்ற உயிரை மீட்டு வருகின்றது. பெண்கள் ஒழுக்கத்துடன் நடந்து கொண்டால் மட்டுமே கடலுக்குச் செல்லும் ஆண்கள் பாதுகாப்பாகக் கரை திரும்ப முடியும் என்று பெண்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. தொன்மை கதைகளில் கற்பை கட்டமைப்பதன் மூலம் பெண்களின் கற்பை பாதுகாக்க முடியும் என்ற சிந்தனை வெளிப்படுகின்றது.

**பெண்களின் கற்பில் ஆண்களின் பெருமை**

பெண் குடும்பம் என்ற கட்டமைப்பிற்குள் ஒடுக்கப்படுகின்றாள் என்ற நிதர்சனம் பதிவு செய்யப்படுகின்றது.

குடும்ப நிறுவனம், பெண்ணை அடக்கியொடுக்குகிறது, குடும்பத்தைச் சிதலமாக்க வேண்டியது உடனடித் தேவை என நவீனப் பெண்ணியவாதிகள் வாதிட்டாலும், குடும்பத்தைவிட்டு

வெளியேறுகிற பெண்ணுக்குச் சமூகப் பாதுகாப்பு பெரிய அளவில் இல்லை. இன்னொருபுறம் கார்ப்ப ரேட்டுகளின் கொடூரமான் பொருளியல் சுரண்டலுக்குச் சார்பாகப் பெண்ணுடல்களை மாற்றுவது துரிதமாக நடைபெறுகிறது. (ந.முருகேச பாண்டியன், ப.5)

பெண்ணியவாதிகள் பெண்ணுரிமைக்கு குரல் கொடுத்தாலும் சமூகம் செவி சாய்பதில்லை என்பதை அறியமுடிகின்றது.

ஒரு ஆணின் பெருமை அவன் மனைவியின் கற்பில் அடங்கி இருக்கிறது என்று சக்கி தன் மகளுக்கு அறிவுறுத்துகின்றாள்.

ஒழுக்கம் இருக்குதே அதுதான் பொண்ணே பெரிசு, மரக்காத்தி யின் ஒழுக்கம்தான் மரக்கானுக்குச் சொத்து. ஒழுக்கத்தையும், மானத்தையும் இழந்துவிட்ட சில சின்ன முதலாளிகள், சில சமயங்களில் கடற்கரையை அசுத்தப் படுத்திவிட்டுப் போய்விடுவார்கள். செம்மீன் அடிக்கவும், கருவாட்டுச் சிப்பம் கட்டவும் கிழக்கே இருந்து சில பெண்கள் வருவதுண்டு. அவர்களும் கடற்கரையை அசுத்தமாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கே தெரியும், கடற்கரையின் பரிசுத்தத் தன்மை? அவர்கள் கடல் தாயின் குழந்தைகளும் அல்ல. ஆனால், அதன் பலாபலன்கள் கடற்கரைச் செம்படவர்களின் தலையில் வந்து விடியும். (தகழி சிவசங்கரப் பிள்ளை, செம்மீன், (தமிழில்) சுந்தரராமசாமி, 2018, ப.52)

கடற்கரையில் வாழும் பெண்கள் கற்புடன் வாழ்ந்தாலும் அங்கே வியாபாரத்திற்கு வரும் ஆண்களும் பெண்களும் ஒழுக்கக் கேடாக நடந்து கொள்கின்றார்கள் என்று சக்கி வருத்தப்படுகிறாள். ஆனால் அவர்கள் செய்கின்ற தவறு அங்கே வாழ்கின்ற மீனவ மக்களை பாதிக்கும் என்று சக்கி தன் மகளிடம் கூறுகின்றாள். அந்த கடற்கரையில் வாழ்கின்றவர்கள் தவறு செய்தாலும் வியாபாரத்திற்கு வருகின்றவர்கள் தவறு செய்தாலும் அதனால் பாதிக்கப்படுவது அந்த கடற்கரை மக்கள் என்ற கருத்துப் பதிவு செய்யப்படுகிறது. அதனால் தன் மக்கள் பாதிக்கப்படும் செயலை செய்து விடக் கூடாது என்று சக்கி தன் மகள் கருத்தம்மாவிற்கு அறிவுறுத்துகின்றாள்.

**கற்புக் கட்டுடைக்கப்படுதல்**

சக்தி தன் மகள் கருத்தம்மாவை பற்றி தவறாகப் பேசுகின்ற பெண்களிடம் சண்டையிடுகின்றாள்.

சின்ன வயதில் சக்கியும் ஒழுக்கம் கெட்டுத் திரிந்தாளாம். பதிலுக்குக் காளிக்குஞ்சுவின் குழந்தையைச் சுட்டிக்காட்டி, இந்தக் குழந்தைக்கு அப்பன் யாருன்னு உனக்குத் தெரியுமா? என்று காளிக்குஞ்சுவிடம் கேட்டாள் சக்கி. கருவாட்டுக்கு முன்பணம் கொடுத்துக்கிட்டுத் திரிஞ்சானே

அந்தத் துலுக்கன்தானே? என்றும் அவள் கேட்டாள். அங்கு கூடியிருந்த எல்லாப் பெண்களைப் பற்றியும், அவர்களின் தாய்மார்களைப் பற்றியும் பழைய கதைகள் எத்தனையோ உண்டு. சக்கி தன்னந்தனியாகவும் மற்றப் பெண்கள் எல்லோரும் ஒரு கட்சியாகவும் நின்று போர் நிகழ்த்தினர். வெகு அழகாகப் போராடினாள் சக்கி. (தகழி சிவசங்கரப் பிள்ளை, செம்மீன், (தமிழில்) சுந்தரராமசாமி, 2018, ப.54)

சக்கி அந்த கடற்கரையில் வாழும் பெண்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றாள். தன் மகளை தவறாகப் பேசிய பெண்களின் ஒழுக்கக் கேடான செயல்களை சக்கி விளக்கமாகக் கூறுகின்றாள். சக்கியும் தவறான ஒழுக்கம் உள்ளவள் என்பதை அங்கு இருக்கும் பெண்கள் குறிப்பிடுகின்றனர். அந்த கடற்கரையில் வாழும் பெண்கள் பெரும்பாலும் ஒழுக்கம் தவறியவர்களாகவே காணப்படுகின்றார்கள் என்பதை பெண்களின் பேச்சு பதிவு செய்கின்றது.

கருத்தம்மா, சக்கி மற்ற பெண்களிடம் தனக்காகச் சண்டையிட்டதையும் அதனால் மற்ற பெண்களும் சக்கியிடம் சண்டையிட்டதை மறைந்திருந்து பார்க்கின்றாள்.

வேலியருகே நின்றவாறு கறுத்தம்மா இதையெல்லாம் கேட்டுக் கொண்டுதானிருந்தாள். அவர்கள் வாயில் அடிபட்ட பழங்கதைகளைக் கேட்டு, அவள் வியப்பில் ஆழ்ந்து போனாள். அவளுடைய தாயாரும் பருவ வயசில் மனசைப் பறிகொடுத்தவள்தானா? அங்கு கூடியிருந்த எல்லாப் பெண்களும் கடற்கரைக்கு மாசு கற்பித்தவர்கள்தானா? அவர்களுடைய மேம்பட்ட வாழ்க்கைத் தத்துவம் பொருளற்ற வரட்டுப் பேச்சுத்தானா? இந்தப் பெண்களைப்பற்றி எத்தனையோ கதைகள் புறப்பட்ட பின்பும், மேற்குக்கடல் அப்படியே விரிந்து பரந்துதான் கிடக்கிறது. தோணிகள் இன்னும் கடலுக்குச் சென்று வருகின்றன. வலைவீசி மீன் பிடிக்கத்தான் செய்கின்றனர். அரயர்கள் நன்றாக வாழ்ந்து வருகின்றனர். அப்படியானால், அந்தப் பழைய கதைக்குப் பொருள்தான் என்ன? (தகழி சிவசங்கரப் பிள்ளை, செம்மீன், (தமிழில்) சுந்தரராமசாமி, 2018, ப.135)

பெண்கள் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று தொன்மக்கதைகளுடன் அறிவுரையும் கூறப்படுகிறது. ஆனால் பெண்கள் அதைக் கேட்டு ஒழுக்கத்துடன் நடந்து கொள்கின்றார்களா என்றால் இல்லை என்பதாகப் பதிவு செய்யப்படுகிறது. பெண்கள் ஒழுக்கம் தவறி நடந்தால் பறந்து விரிந்த கடல் தண்டிக்கும் என்று கட்டமைக்கப்பட்ட தொன்மக்கதைக்குப் பொருள் கேள்வி குறிதான். பெண்களைக் கட்டுப்படுத்த புனையப்பட்டவைகள் தொன்மக்கதைகள் என்பது பதிவு செய்யப்படுகிறது.

## தொகுப்புரை

1. மீனவர்களின் பிறப்பு மகாபாரதக் கதை எழுதிய வியாசரின் வழித்தோன்றல்கள் என்று தொன்மக் கதை கட்டமைக்கின்றது.
2. பெண்ணின் அடிப்படைத் தேவைகள் ஆணின் மூலமாகவே நிறைவு செய்யப்படுகிறது. ஆண்களின் பெருமை பெண்களின் கற்பில் கட்டமைக்கப்படுகிறது.
3. கடல்புரத்தில், செம்மீன் ஆகிய புதினங்களில் கடலுக்குச் செல்லும் ஆண்கள் உயிருடன் திரும்புவதற்குப் காரணம் பெண்களின் கற்பு என்று தொன்மக் கதைகள் வழி வலியுறுத்தப்படுகிறது.
4. பெண்கள் ஒழுக்கம் தவறி நடந்தாலும் கடலுக்குச் செல்லும் ஆண்கள் உயிருடன் திரும்பிக் கொண்டுதான் இருக்கின்றார்கள் என்று தொன்மக்கதை கட்டுடைக்கப்படுகிறது.
5. பெண்களின் ஒழுக்கம் ஆண்களால் வரையறுக்கப்படுகிறது. இயற்கைக்கும் பெண்களின் ஒழுக்கத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை கடல் புறத்தில், செம்மீன் புதினங்கள் பதிவு செய்கின்றன.

## முடிவுரை

மீனவ இன மக்களின் வாழ்வியல் மிகவும் துயரம் நிறைந்தது என்பதை மீனவர்கள் கடலுக்குச் சென்று இயற்கைப் பேரிடர்களைச் சந்திக்கும் செயல் வழி அறிய முடியும். கடலுக்குச் செல்லும் ஆண்கள் பல்வேறு இடர்களைச் சந்திக்கும் நிலையில் அதிலிருந்து மீண்டு வருவதற்குப் பெண்கள் இறைவனை வேண்டிக் கொள்ள வேண்டும். இறைவனை வேண்டுவதோடு மட்டுமல்லாமல் ஒழுக்கம் தவறிவிடக் கூடாது. பெண்கள் ஒழுக்கம் தவறி நடந்தால் கடலுக்குச் செல்லும் ஆண்கள் உயிருடன் திரும்ப மாட்டார்கள் என்று கடல்புரத்தில், செம்மீன் ஆகிய இரு புதினங்களும் குறிப்பிடுகின்றன. ஆனால் பிலோமி, சக்கி மற்றும் பல பெண்கள் ஒழுக்கம் தவறியவர்களாவே கட்டமைக்கப்படுகின்றார்கள். ஆனாலும் கடலுக்குச் செல்லும் ஆண்கள் உயிருடன் திரும்பிக் கொண்டு தான் இருக்கின்றார்கள் என்று கடல்புரத்தில், செம்மீன் ஆகிய இரு புதினங்களும் பதிவு செய்கின்றன. இயற்கைச் சீற்றங்களுக்கும் பெண்களின் ஒழுக்கத்திற்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்பது கடல்புரத்தில், செம்மீன் ஆகிய இரு புதினங்களும் ஒப்பீட்டு ஆராயப்பட்டுள்ளன.

## துணைநூற்பட்டியல்


1. இராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண், தாகம் பதிப்பகம், சென்னை, 2002.
2. எட்கர் தர்ஸ்டன், க. ரத்னம் (த.ஆ) தென்னியந்தியக் குலங்களும் குடிகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2003.

3. சந்திரன். ஆ, புதிய வெயிலும் நீலக்கடலும் நாவல் புனைந்திடும் வாழ்வின் எதார்த்தங்கள் , சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ், தொகு - 7, இதழ் - 4, ஏப்ரல். 2023.
4. சரஸ்வதி. சு, முனைவர். தமிழச்சியின் கத்தி - சுப்பம்மாவின் வீரவுணர்வு, தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி - 7, இதழ்- 1, ஜூலை. 2024.
5. சுலோசனா.நா, முனைவர். பெண் விடுதலை நோக்கில் மனோன்மணியம், தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் , தொகுதி - 1, இதழ் -1, ஜூலை. 2018.
6. சேது, கு,றிஞ்சிவேலன் (தமிழிழ்), அடையாளங்கள், சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2013.
7. தகழி சிவசங்கரப் பிள்ளை, சுந்தரராமசாமி (தமிழில்), செம்மீன், சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2018.
8. தனஞ்செயன், குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், பி. லிட், சென்னை, 2012.
9. பரமசிவம். அரு, பரதவர் இனவரைவியல், காவ்யா வெளியீடு, சென்னை, 2014.
10. புனித லெட்சுமி . ந முனைவர், ஒப்பீட்டுத் திறனாய்வு நோக்கில் திருமூலரின் திருமந்திரம், கவிமணியின் உமர்கய்யாம் பாடல்கள், தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி - 5, இதழ் - 2, ஜூன். 2023.
11. முருகேச பாண்டியன். ந. குடும்ப உறவுகளில் கசிந்திடும் துயரக் கதைகள், பாக்களத்தம்மா நாவலை முன்வைத்துச் சொல்லாடல்கள், சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ், தொகுதி - 8, இதழ் - 1 , ஜூலை. 2023,
12. ரம்யா.பா, முனைவர். பண்பாட்டுப் பார்வையில் பரதவர்கள், தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சூழல்கள், பன்னாட்டுக் கருத்தரங்கம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி மதுரை. பிப்ரவரி. 2024.
13. ராகுல் சாங்கிருத்யாயன், மனித சமுதாயம், ஏ.ஜி.எத்திராஜீலு (த.ஆ) நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்,பி. லிட்,சென்னை, .2013.
14. ராஜ்கௌதமன்,பாட்டும் தொகையும் தொல்காப்பிய தமிழ்ச் சமூக உருவாக்கமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2006.
15. ராஜ்கௌதமன், தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், 2008.
16. வண்ணநிலவன், கடல்புரத்தில், நற்றிணை பதிப்பகம், சென்னை, 2020.